திருச்சிராப்பள்ளி மாநகராட்சி

2019 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 31 ஆம் நாள், வியாழன் கிழமை மாலை 4.00 மணியளவில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களது அறையில் பின்வரும் பொருள்களைப் பற்றிக் கூட்டம் நடைபெறும்.

நிகழ்ச்சி நிரல்

பொருள். 1

திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், திம்மராயசமுத்திரம் கிராமம், திருச்சி மற்றும் ஸ்ரீரங்கம் இரயில் நிலையங்களுக்கிடையேயுள்ள கடவு எண் 380ஏ–க்கு மாற்றாக சாலை மேம்பாலம் மற்றும் சுரங்கப்பாதை அமைக்கும் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும், மேற்படி பணிக்காக கீழ்க்கண்ட புல எண்களுக்குட்பட்ட நிலங்கள் கையகம் செய்யப்படவுள்ளதாகவும், நில கையகம் செய்வது தொடர்பாக மாவட்ட மற்றும் மாநில அரசிதழ்களில் ஏற்கெனவே பிரசுரம் செய்யப்பட்டு விட்டதால், மாநகராட்சியின் கட்டுப்பாட்டிலுள்ள கீழ்க்கண்ட நிலங்களைக் கையகம் செய்ய ஏதுவாக தடையின்மைச் சான்று வழங்கிட மாவட்ட வருவாய் அலுவலர், திருச்சிராப்பள்ளி அவர்களின் கடிதம் எண் ந.க.சி1/31032/2012, நாள் 25.10.2019ல் கோரப்பட்டுள்ளது.

வ. எண்	நகர புல எண்	மொத்தப் பரப்பு (ச.மீ.)	கையக பரப்பு (ச.மீ.)
வார்டு AB, பிளாக் எண் 45			
1	2019/28	0.0210.5	0.0210.5
2	2019/29	0.3495.5	0.0101.0
3	2019/92	0.0691.0	0.0691.0
4	2019/138	0.2826.0	0.0173.0
5	2019/2	0.8500.0	0.0057.0
வார்டு B, பிளாக் எண் 44			
1	2056/B1-57	0.1065.0	0.1065.0
2	2056/B2-46	0.0940.5	0.0940.5
வார்டு B, பிளாக் எண் 45			
1	2058/1	0.0370.0	0.0370.0
2	2059/6	1.6963.0	0.1027.0

மேற்படி புல எண்களுக்குட்பட்ட இடங்கள் பார்வையிடப்பட்டன. மேற்படி இடம், தேர்தல் வார்டு எண் 5ல் அமைகிறது. மேற்படி நிலங்களில் மாநகராட்சியின் திட்டங்கள் ஏதுமில்லாத காரணத்தினாலும், நில கையகம் செய்வது தொடர்பாக மாவட்ட மற்றும் மாநில அரசிதழ்களில் ஏற்கெனவே பிரசுரம் செய்யப்பட்டு விட்டதாலும், பொதுமக்கள் நலன்கருதி மேற்கண்ட நிலங்களைக் கையகம் செய்ய, தனி அலுவலர் மன்றத்திற்குப் பொருள் வைக்கப்படுகின்றது.

அலுவலகக் குறிப்பு :

மேற்படி உத்தேச இடங்களில், தற்போது மாநகராட்சி திட்டங்கள் ஏதுமில்லாத காரணத்தினால், நில கையகம் மேற்கொள்ளப்படவுள்ள மேற்படி நிலங்களைக் கையகம் செய்ய தடையின்மைச் சான்று வழங்கலாம்.

(எப்1/5348/19/ஸ்ரீ)

தீர்மானம் எண்.591 (பொருள்–1) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.

பொருள். 2

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, பொன்மலை கோட்டம், வார்டு எண்.34க்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் விநியோக குழாய் பதிக்கும் பணிகள் முடிக்கப்பட்டு, பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. மேற்படி பணிகளுக்கு இறுதி பட்டியல் வழங்கப்பட்டு, 3 ஆண்டுகள் கடந்து விட்டது. எனவே மேற்படி பணிகளுக்கு பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்டுள்ள பட்டியல் தொகை மற்றும் கூடுதல் வைப்புதொகை ஆகியவைகளை திரும்ப வழங்கும் படி மெசர்ஸ். S.S.சுந்தர் கன்ஸ்ட்ரக்ஸன்ஸ், திருச்சி ஒப்பந்ததாரர் கோரியுள்ளார்.

மெசர்ஸ்.S.S.சுந்தர் கன்ஸ்ட்ரக்ஸன்ஸ், ஒப்பந்ததாரர் செலுத்திய பிணை வைப்புத் தொகை ரூ.25,273/- இம்மாநகராட்சி நிலுவை வைப்புத் தொகை பதிவேடுகளில் கீழ்க்கண்டவாறு பதியப் பட்டுள்ளது.

மேற்படி ஒப்பந்ததாரர்களிடமிருந்து பிடித்தம் செய்துள்ள காப்புத்தொகை இம்மாநகராட்சி காலங் கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் (Lapsed Deposit Account) கலம் எண் 7ல் கண்டுள்ளவாறு பதிவு செய்யப்பட்டுள்ளது.

வ எண்	பணியின் விபரம்	ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்)	செலுத்திய இடம்	பிடித்தம் செய்யப் பட்டுள்ள தொகை விபரம்	தொகை (ரூபாயில்)	காலங்கடந்த நிலுவை வைப்பத் தொகை (2019–20) பதிவேட்டின் பக்க எண் & வரிசை எண்
1	2	3	4	5	6	7
1	வார்டு எண்.34 ஏரிக்கரை சாலையில் இருந்து சுந்தராஜ் நகர் பகுதியில் புதிய மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி வரை புதிதாக குடிநீர் விநியோக குழாய் பதிக்கும் பணி மதிப்பீடு ரூ. 6.50 இலட்சம் இ4/9488/2014 (மையம்)	மெசர்ஸ். S.S.சுந்தர் கன்ஸ்ட்ரக்ஸன்ஸ்,	முதல் மற்றும் இறுதி பட்டியல் தொகை	05.02.15 காப்புத் தொகை	25273.00	பகுதி -VII பக்கம் எண்- 65 வ.எண் -901 (மைய அலுவலகம்)
மொத்தம்					**25273.00**	

மேலும், மேற்கண்ட பணியினை மேற்கொண்ட ஒப்பந்ததாரர்களுக்கு தணிக்கையில் “எவ்வித தணிக்கைத் தடையும் இல்லை” எனச் சான்று அளிக்கப்பட்டுள்ளதால், கலம் எண் 6ல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு பிடித்தம் செய்யப்பட்டு காலம் கடந்த வைப்புத் தொகை பதிவேடுகளில் பதிவு செய்யப்பட்டுள்ள தொகைகளை சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர்களுக்கு திரும்ப வழங்க தனிஅலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிக்கு பிடித்தம் செய்துள்ள காப்புத் தொகைகள் கடந்த 3 வருடங்களுக்கு முன் செலுத்தப்பட்டு காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கில் உள்ளதால், தற்பொழுது காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கிலிருந்து (Lapsed Deposit Account) அத்தொகையை ஒப்பந்ததாரர்களான மெசர்ஸ்.S.S.சுந்தர் கன்ஸ்ட்ரக்ஸன்ஸ், ஒப்பந்ததாரர், திருச்சி நிறுவனத்திற்கு ரூ.25,273/–யை, திரும்ப வழங்க ஒப்புதல் அளிக்கலாம்.

இ7/9488/2014(மையம்)

தீர்மானம் எண்.592 (பொருள்–2) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.

பொருள். 3

தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் மன்ற தீர்மானம் எண்.197 நாள்.12.06.2018. திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, கோ.அபிஷேகபுரம் கோட்டத்திற்க்கு உட்பட்ட பகுதிகளில் சுகாதாரக்கேடு ஏற்படாத வண்ணம் தினசரி திடக்கழிவு மேலாண்மை பணி மேற்கொள்ள

சுயஉதவி குழுக்களின் மூலம் பணிபுரியும் 174 துப்பரவு பணியாளர்களுக்கு மாத ஊதியம் வழங்கப்பட்டது. மேலும் தனிஅலுவலர் (ம) ஆணையர் அவர்களிடம் 01.04.2019 மதல் 31.08.2019 வரை மாத ஊதியம் வழங்க அனுமதி பெறப்பட்டு உள்ளது. இந்நிலையில் 2019-2020ம் நிதியாண்டிற்கு மேற்கண்ட சுயஉதவிக்குழுவில் உள்ள 174 துப்புரவு பணியாளர்களை 01.04.2019 முதல் 31.03.2020 வரை பணியமர்த்தி கொள்ள அனுமதியும், அதற்காக ஆகும் ஆண்டு ஊதிய செலவினத்திற்கும் (174×360×366) = ரூ.2,29,26,240/–ஐ தனிஅலுவலர் (ம) ஆணையர் அவர்களின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

வ. எண்	சுயஉதவிக் குழுக்களின் பெயர்	துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை	ஊதியம் வழங்க வேண்டிய காலம்
1	அலைகள்	20	01.04.19 – 31.03.2020
2	அம்பேத்கார்	19	01.04.19 – 31.03.2020
3	சுபாஷ்	18	01.04.19 – 31.03.2020
4	தில்லை	19	01.04.19 – 31.03.2020
5	வெக்காளி	19	01.04.19 – 31.03.2020
6	முத்து	20	01.04.19 – 31.03.2020
7	தீபம்	20	01.04.19 – 31.03.2020
8	காவேரி (Waste Picker)	24	01.04.19 – 31.03.2020
9	தூய்மை (Waste Picker)	15	01.04.19 – 31.03.2020
கூடுதல்		174	

அலுவலக குறிப்பு :

இக்குழுவில் உள்ள துப்புரவு பணியாளர்கள் 174 நபர்களை தொடர்ந்து தினக்கூலி அடிப்படையில் பணி அமர்த்தவும், அதற்கான ஆண்டு உத்தேச செலவீனம் ரூ.2,29,26,240/–க்கு அனுமதி வழங்கலாம். 01.04.19 முதல் 31.08.2019வரை அனுமதிக்கப்பட்டதற்கு பின்னேற்பு வழங்கலாம்.

கோப்பு எண்.சி3/1187/2019(கோ.அபி)

தீர்மானம் எண்.593 (பொருள்–3) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.

பொருள். 4

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்கு நாளது தேதி வரை மின் ஆளுமை பணிகளை மேற்கொள்ள பிரத்யேக அரசு ஆணை ஏதும் வெளியிடப்படவில்லை. மாநகராட்சி நிலைக்கு உயர்த்தப்பட்ட பின்னர், அனைத்து பணிகளும் கணினி மயமாக்க அரசால் ஆணையிடப்பட்டதன் பொருட்டு மாவட்ட ஆட்சித்தலைவரால் ஆண்டு தோறும் நிர்ணயிக்கப்படும் தினக்கூலி அடிப்படையில் புள்ளி விவர தொகுப்பாளர்கள் ஈடுபடுத்தப்பட்டு மாமன்றத்தின் ஒப்புதலுடன் தினக்கூலி அடிப்படைக்கு பதிலாக தொகுப்பூதியம் நிர்ணயம் செய்யப்பட்டு இதன் அடிப்படையில் இன்றைய நாளில் 18 புள்ளி விவர தொகுப்பாளர்கள் மைய அலுவலக மற்றும் வார்டு அலுவலகங்களின் அனைத்து வகையான கணினி பணிகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் இம்மாநகராட்சியின் பிறப்பு, இறப்பு சம்மந்தமான பதிவுகளை கணினி மயமாக்க ஏதுவாக பதிவிறக்கம் செய்யவும் இம்மாநகராட்சிக்கு பிற்காலத்தில் தேவைப்படும் ஆவணங்கள், நீதிமன்ற வழக்குகள், வரிவிதிப்பு தொடர்பான ஆவணங்கள், உள்ளிட்டவைகளை மைய மற்றும் வார்டு அலுவலகங்களில் பதிவேற்றம் செய்து கொள்ள தேவையான 23 பணியாளர்களை மாவட்ட ஆட்சியரால் நிர்ணயிக்கப்படும் தினக்கூலி அடிப்படையில் பணி அமர்த்திட மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டதில் மனித ஆற்றல் விநியோகம் செய்யும் நிறுவனம் மூலம் ஒப்பந்த புள்ளிகள் பெற்று அமர்த்திக் கொள்ள மாமன்ற தீர்மானம் எண்.69, நாள்.28.02.2014ல் ஒப்புதல் அளித்துள்ளது.

மேற்கண்ட மாமன்ற ஒப்புதலின் அடிப்படையில் கணிணிப் பணிகளை மேற்கொள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய மெர்சஸ். ஆலன் இன்போ சர்வீஸ் நிறுவனம் மூலம் கடந்து 06.06.2014 முதல் ஒவ்வொரு வருடமும் ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதியுடன் பணி நீட்டிப்பு செய்யப்பட்டு முதல் கட்டமாக 23 பணியாளர்களுக்கு பதிலாக 12 நபர்களையும் அதன் தொடர்ச்சியாக கணக்கு பிரிவில் புதிய மென்பொருள் கையாளுதல் (7 Digit) ஏழு இலக்க எண் முறையில் புதிய கணக்கு முறையினை பராமரிக்க வேண்டியதன் அவசியம் கருதி மேலும் ஒரு நபரையும், சேர்த்து 13 நபர்களை ஈடுபடுத்தி பணிகள் நடைபெற்று வருகின்றது.

இந்நிலையில், மெர்சஸ். ஆலன் இன்போ சர்வீஸ் நிறுவனம் மூலம் கடந்த 06.06.2014 முதல் 05.06.2019 வரை 05 ஆண்டுகள் பணிகள் மேற்கொள்ளப்பட்டு மேற்கண்ட ஒப்பந்த காலம் 05.06.2019 உடன் முடிவடையும் காரணத்தால், தற்போது குறைந்த விலைப்புள்ளி வழங்கும் நிறுவனம் மூலம் பணிகளை மேற்கொள்ள ஏதுவாக புதிய ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது.

இதனைத் தொடர்ந்து, ஏற்கனவே மனித ஆற்றல் தருவிக்கும் திருவாளர். ஆலன் இன்போ சர்வீஸ் நிறுவனம் மூலம் 06.06.2019 முதல் 05.08.2019 முடிய இரு மாதங்களுக்கு கணிணிப் பணிகளை மேற்கொள்ளவும், இதனால் ஏற்படும் செலவினத்திற்கும் தனி அலுவலர் அவர்களுக்கு பொருள் வைக்கப்பட்டு தனி அலுவலர் அவர்களின் தீர்மானம் எண்.343 நாள்.17.07.2019ல் வழங்கப்பட்டுள்ள ஒப்புதலின் அடிப்படையில் மேற்கண்ட நபர்களுக்கான ஜூன்–2019 மற்றும் ஜூலை–2019 ஆகிய இரு மாதங்களுக்கு ஊதியம் வழங்கப்பட்டுவிட்டது.

இந்நிலையில், மேற்கண்ட பணிகளுக்கான புதிய ஒப்பந்தப்புள்ளிகள் கோரி மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் முடிவடைந்து புதிய நிறுவனத்திற்கான உரிய வேலை உத்தரவு 01.10.2019 முதல் மேற்கொள்ளும் பொருட்டு வழங்கப்பட்டுள்ளது.

எனவே, 01.10.2019 முதல் பணி உத்தரவு வழங்கப்பட்ட நிலையில் கணிணிப் பணியின் முக்கியத்துவம் கருதி 06.08.2019 முதல் 30.09.2019 முடிய ஏற்கனவே மனித ஆற்றல் தருவிக்கும் மெர்சஸ். ஆலன் இன்போ சர்வீஸ் நிறுவனம் மூலம் மனித ஆற்றலைப் பயன்படுத்திக் கொண்டமைக்கு அனுமதியும், இதனால் ஏற்படும் செலவினத்திற்கும் தனி அலுவலர் அவர்களுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

ஒப்புதல் வழங்கலாம்.

சி1(மையம்)/4706/2017

தீர்மானம் எண்.594 (பொருள்–4) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.

பொருள். 5

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி பகுதி பொதுமக்களுக்கு மழைநீர் சேகரிப்பு மற்றும் விழிப்புணர்வு குறித்து மாநகராட்சி நிர்வாகத்தால் தொடர்ந்து அறிவுறுத்தப்பட்டு வருகிறது. இந்நிலையில் மேற்கண்ட பணிகளில் ஒரு பகுதியாக பொதுமக்களுக்கு மழைநிர் சேகரிப்பு குறித்த விழிப்புணர்வு பிரசுரங்களை அஞ்சல் அட்டையில் அச்சிட்டு பொதுமக்களுக்கு வரி விதிப்பு அட்டையின் மூலமாக நேரிடையாக பொதுமக்களுக்கு வீடுதோறும் விநியோகம் செய்யலாம் என ஆணையர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே, மேற்கண்ட பணிகள் தொடர்பாக அஞ்சல் துறையிடம் விலைப்புள்ளி கோரப்பட்டதில், தலைமை அஞ்சல் அலுவலகம், திருச்சி மூலமாக ஒரு அஞ்சல் அட்டையில் அச்சடித்து வழங்க ரூ.2.00/– வீதம் 1,00,000 அஞ்சல் அட்டைகள் அச்சடித்து வழங்க ரூ.2,25,000/– செலவினம் ஆகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது இதன்படி மேற்கண்ட விலைப்பட்டியலின் அடிப்படையில் செலவுத் தொகையினை அனுமதிக்கலாம்.

எனவே, அவசர அவசியம் கருதி இப்பணியினை திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டம் 1994 பிரிவு 15ன் அடிப்படையில் மேற்கொள்ளவும், மேலும், குடிநீர் வறட்சி நிவாரண நிதி ரூ.167.00 இலட்சத்திலிருந்து இதற்கான செலவினத்தை மேற்கொள்ளவும் தனிஅலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

அனுமதி அளிக்கலாம்.

(சி5/10417/2019(மையம்)

தீர்மானம் எண்.595 (பொருள்–5) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.

பொருள். 6

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, கோ. அபிஷேகபுரம் கோட்டம், வார்டு எண் 57க்குட்பட்ட அண்ணாமலை நகர் தாமரை சாலை விஸ்தரிப்பு பகுதிக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்ய இயலாமல் உள்ளது. பொதுமக்களின் தேவைக்கு போதுமான அளவு குடிநீர் வழங்க இயலவில்லை எனவே பொதுமக்களின் நலன் கருதி அண்ணாமலை நகர் மேற்கு பகுதியிலிருந்து கிழக்கு பகுதிக்கு கரூர் புறவழிச் சாலை மேம்பாலத்தை குடைந்து (Trenchless method) குடிநீர் பிரதான குழாய் அமைக்கும் பணியினை மேற்கொள்வதற்கு தொகை ரூ.11.71 இலட்சத்தில் திரு. A. ஜேம்ஸ் ஆல்பர்ட் சேவியர் திருச்சி ஒப்பந்ததாரர் மூலம் அவசர அவசியம் கருதியும், 1994 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டம் பிரிவு 15ன் கீழ் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.13% குறைவான விலைவிகிதத்தில் பணி மேற்கொள்ளப்பட்டதை தனிஅலுவலர் அவர்களின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது .

அலுவலகக் குறிப்பு :

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

(இ4/10548/2019(மையம்)

தீர்மானம் எண்.596 (பொருள்–6) : பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.

பொருள். 7

அரசு தனது ஆணை எண்.327 நிதி(ஓய்வூதிய)த் துறை நாள்.21.10.2019ல் ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் 12 % அகவிலைப் படியினை 5 % கூடுதலாக உயர்வு செய்து 17 சதவீதமாக 01.07.2019 முதல் உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது. இதன் படி ஏற்படும் அகவிலைப்படி வித்தியாச நிலுவைத் தொகையினை ஜீலை, ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் 2019 ஆகிய 3 மாதங்களுக்கு ரொக்கமாக பெற்றுக் கொள்ளவும் அக்டோபர் 2019 முதல் மாத ஊதியத்தில் உயர்த்தப்பட்ட விகிதத்தில் அகவிலைப்படி வழங்கிடவும் அனுமதித்து ஆணையிடப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட அரசாணையின் படி ஜீலை, ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் 2019 ஆகிய 3 மாதங்களுக்கு உயர்த்தப்பட்ட அகவிலைப்படி வித்தியாச நிலுவைத் தொகை மற்றும் அக்டோபர் 2019 முதல் மாத ஊதியத்தில் / ஓய்வூதியத்தில் உயர்த்தப்பட்ட விகிதத்தில் அகவிலைப்படி வழங்கிடவும் தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

ஒப்புதல் வழங்கலாம்.

கோப்பு எண்.சி2/10767/2019(மையம்)

தீர்மானம் எண்.597 (பொருள்–7) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.

பொருள். 8

அரசு தனது ஆணை எண்.323 நிதி(படிகள்)த் துறை நாள்.17.10.2019ல் அரசு மற்றும் உள்ளாட்சி துறையில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் 12 % அகவிலைப் படியினை 5 % கூடுதலாக உயர்வு செய்து 17 சதவீதமாக 01.07.2019 முதல் உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது. மேலும் இதனால் ஜீலை, ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் 2019 ஆகிய 3 மாதங்களுக்கு ECS மூலம் பெற்றுக் கொள்ளவும் அக்டோபர் 2019 முதல் மாத ஊதியத்தில் உயர்த்தப்பட்ட விகிதத்தில் அகவிலைப்படி வழங்கிடவும் அனுமதித்து ஆணையிடப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட அரசாணையின் படி ஜீலை, ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் 2019 ஆகிய 3 மாதங்களுக்கு உயர்த்தப்பட்ட அகவிலைப்படி வித்தியாச நிலுவைத் தொகை மற்றும் அக்டோபர் 2019 முதல் மாத ஊதியத்தில் உயர்த்தப்பட்ட விகிதத்தில் அகவிலைப்படி வழங்கிடவும் தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

ஒப்புதல் வழங்கலாம்.

கோப்பு எண்.சி2/10655/2019(மையம்)

தீர்மானம் எண்.598 (பொருள்–8) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.

பொருள். 9

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, அரியமங்கலம் கோட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் கீழ்கண்ட பணியினை திரு.கே.ராமசாமி, திருச்சி அவர்களால் மேற்கொள்ளப்பட்டதற்கு இறுதிப் பட்டியல் வழங்கப்பட்டு விட்டது. இப்பணிகளுக்கு பிடித்தம் செய்துள்ள காப்புத் தொகையினை திரும்ப வழங்க கோரியுள்ளார். கீழ்கண்டுள்ள பணிகளை மேற்கொண்டமைக்கு தணிக்கையில் எவ்வித தணிக்கைத் தடையும் எழுப்பப்படவில்லை.

மேற்படி ஒப்பந்ததாரர் செலுத்தியுள்ள காப்புத் தொகை இம்மாநகராட்சி காலங்கடந்த வைப்புத் தொகை மற்றும் காப்புத் தொகை பதிவேடுகளில் கீழ்கண்டவாறு பதிவு செய்யப்பட்டுள்ளது.

வ எண்	பணியின் விபரம்	பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட நாள்	பிடித்தம் செய்யப்பட்ட தொகை (ரூபாயில்)	காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் பக்க எண் & வரிசை எண்		
1	2	4	5	6		
				தொகுப்பு	**ப. எண்**	**வ . எண்**
1	வார்டு எண்20க்குட்பட்ட வரகனேரி பென்சனர் தெருவில் மழைநீர் வடிகால் மற்றும் நடைபாதை கட்டும் பணி **மதிப்பீடு ரூ.6.00 லட்சம்** இ3/ 4332 / 12	04.10.12 (SD) 3%	23992.00	V	34	456
2	வார்டு எண் 15க்குட்பட்ட தாரா நல்லூர் தோப்பு தெருவில் மழைநீர் வடிகாலுடன் கூடிய சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல் **மதிப்பீடு ரூ.3.00 லட்சம்** இ3/ 2382 / 15	29.07.15 (SD) 4%	19807.00	VIII	24	12
3	வார்டு எண்29க்குட்பட்ட ஜெகநாத புரம் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி வளாகத்தில் சுற்றுச் சுவர் கட்டும் பணி **மதிப்பீடு ரூ.9.20 லட்சம்** இ3/ 3273 / 15	16.10.15 (SD) 4%	36409.00	VIII	96	264
4	வார்டு எண்29க்குட்பட்ட பகுதியில்	21.04.15 (SD) 4%	36212.00	VIII	3	36

	உள்ள அரியமங்கலம் இளநிலைப் பொறியாளர் அலுவலகம் மராமத்து செய்தல் **மதிப்பீடு ரூ.9.25 லட்சம்** இ3/ 8421 / 14					
5	வார்டு எண்14க்குட்பட்ட இ.பி சாலையில் உள்ள சித்த மருத்துவ மனையில் மராமத்து மேற்கொள்ளும் பணி **மதிப்பீடு ரூ.2.75 லட்சம்** இ3/ 3586 / 15	18.03.16 (SD) 4%	10752.00	VIII	71	76
6	வார்டு எண்7,28,29,61 62, 64க்குட்பட்ட பகுதியில் உள்ள வாக்குச் சாவடிகளில் தற்காலிக பணிகள் மேற்கொள்ளுதல் **மதிப்பீடு ரூ.3.15 லட்சம்** இ3/ 3348 / 14	19.08.14 (SD) 4%	12437.00	VII	20	260
7	வார்டு எண்19க்குட்பட்ட சென்னை திருச்சி திண்டுக்கல் சாலையின் குறுக்கே அமைந்துள்ள சிறுபாலம் திரும்ப கட்டுதல் **மதிப்பீடு ரூ.3.10 லட்சம்** இ3/ 9310 / 14	16.03.15 (SD) 4%	12288.00	VII	51	717
8	வார்டு எண்33க்குட்பட்ட பவுல் தெர மற்றும் அருள் தெருவில் உள்ள சிமெண்ட் கான்கிரீட் தளம் அமைத்தல் **மதிப்பீடு ரூ.5.00 லட்சம்** இ3/ 653 / 16	02.08.16 (SD) 4%	19940.00	-	-	-
மொத்தம்			**171837.00**			

எனவே, பட்டியலில் கண்டுள்ளவாறு இப்பணிகளுக்கு செலுத்தியுள்ள காப்புத் தொகை ரூ.**1,71,837**/–ஐ காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டிலிருந்து ஒப்பந்ததாரர் திரு.கே.ராமசாமி, திருச்சி அவர்களுக்கு திரும்ப வழங்க தனிஅலுவலர் அவர்களின் அனுமதிக்கு பொருள் வைக்கப் படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிக்கு செலுத்தியுள்ள செய்துள்ள காப்புத் தொகை ரூ.**1,71,837**/–ஐ காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கிலிருந்து (Lapsed Deposit Account) திரும்ப வழங்க ஒப்புதல் அளிக்கலாம்.

E3 / 653 / 16

தீர்மானம் எண்.599 (பொருள்–9) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.

பொருள். 10

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, அரியமங்கலம் கோட்டம் மற்றும் கோ.அபிஷேகபுரம் கோட்டத்திற்குட்பட்ட பகுதியில் கீழ்கண்ட பணிகளை திரு.எம்.நாகராஜன், திருச்சி அவர்களால் மேற்கொள்ளப்பட்டதற்கு இறுதிப் பட்டியல் வழங்கப்பட்டு விட்டது. இப்பணிகளுக்கு பிடித்தம் செய்துள்ள காப்புத் தொகையினை திரும்ப வழங்க கோரியுள்ளார். கீழ்கண்டுள்ள பணிகளை மேற்கொண்டமைக்கு தணிக்கையில் எவ்வித தணிக்கைத் தடையும் எழுப்பப் படவில்லை.

மேற்படி ஒப்பந்ததாரரிடம் பிடித்தம் செய்துள்ள வைப்புத் தொகை இம்மாநகராட்சி காலங்கடந்த வைப்புத் தொகை மற்றும் காப்புத் தொகை பதிவேடுகளில் கீழ்கண்டவாறு பதிவு செய்யப்பட்டுள்ளது.

வ எண்	பணியின் விபரம்	ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்)	பட்டியலில் பிடித்தம் செய்யப் பட்ட நாள்	பிடித்தம் செய்யப்பட்ட தொகை (ரூபாயில்)	காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் பக்க எண் & வரிசை எண்		
1	2	3	4	5	6	7	8
					தொகுப்பு	**ப. எண்**	**வ எண்**
1	வார்டு எண் 60க்குட்பட்ட பாண்டமங்கலம் உறையூர் புதுக்காலனியில் சமுதாயக் கூடம் கட்டுதல் **மதிப்பீடு ரூ.2.40லட்சம்** இ3/1590/11	திரு. எம். நாகராஜன், திருச்சி	06.06.14 4%	75137.00	VII	10	118
			02.01.15 4%	51433.00	VII	43	586
2	அரியமங்கலம் கோட்ட அலுவலகம் முதல் தளத்தில் கூடுதல் கட்டிடம் கட்டுதல் **மதிப்பீடு ரூ.29.00 லட்சம்** இ3/ 4394 / 13	திரு. எம். நாகராஜன், திருச்சி	31.10.14 4%	22170.00	VII	36	482
			02.06.15 4%	89601.00	VIII	15	13
			09.03.16 4%	9724.00	VIII	69	47
மொத்தம்				**248065.00**	-	-	-

எனவே, பட்டியலில் கண்டுள்ளவாறு இப்பணிகளுக்கு பட்டியலில் பிடித்தம் செய்துள்ள காப்புத் தொகை ரூ.**2,48,065**/–ஐ காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டிலிருந்து ஒப்பந்ததாரர் திரு.எம்.நாகராஜன், திருச்சி அவர்களுக்கு திரும்ப வழங்க தனிஅலுவலர் அவர்களின்அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிகளுக்கு பிடித்தம் செய்துள்ள காப்புத் தொகை ரூ.**2,48,065**/–ஐ காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கிலிருந்து (Lapsed Deposit Account) திரும்ப வழங்க ஒப்புதல் அளிக்கலாம்.

இ3/1590/11(மையம்)

தீர்மானம் எண்.600 (பொருள்–10) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.

பொருள். 11

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி அரியமங்கலம் கோட்டம் வார்டு எண். 61, 62 மற்றும் 64க்குட்பட்ட பகுதிகளில் வைக்கப்பட்டுள்ள 111 எண்ணிக்கையிலான சின்டெக்ஸ் தொட்டிகளில் தினசரி 2 முறை, வாடகை ஒப்பந்த அடிப்படையில் 3 எண்ணிக்கை 12000 லிட்டர் கொள்ளளவுள்ள டேங்கர் பொருத்தப்பட்ட ஆயில் இன்ஜினுடன் கூடிய தனியார் லாரிகள் மூலம் 185 நாட்களுக்கு குடிநீர் வழங்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி நாள்:28.11.2018ல், ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் நான்கு நிறுவனங்கள் கலந்து கொண்டதில், M/s. Sri Lakshmi transport, madhurai நிறுவனத்தாரால் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கப்பட்டுள்ளது. குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய மேற்கண்ட நிறுவனத்தாருக்கு கூடுதல் வைப்பு தொகை செலுத்த கோரி அறிவிப்பு கடிதம் 21.01.2019-ல் அனுப்பப்பட்டது. ஆனால் மேற்கண்ட நிறுவனத்தாரிடமிருந்து எவ்வித தகவலும் பெறப்படவில்லை. எனவே ஒப்பந்தப்புள்ளி விதிமுறைகளின் படி L1 நிறுவனம் செலுத்த வேண்டிய கூடுதல் வைப்புத்தொகையை செலுத்த தவறியதால், L2 நிறுவனமாகிய M/s. Cithradevi water suppliers, Chennai நிறுவனத்தாரிடம், L1 நிறுவனம் ஒப்பந்தப்புள்ளியில் வழங்கியுள்ள விலை வீதத்தில் கூடுதல் வைப்புத்தொகை செலுத்தி பணி மேற்கொள்வதற்கு தங்களது விருப்பத்தினை தெரிவிக்க கோரி அறிவிப்பு கடிதம் நாள்:18.02.2019-ல்அனுப்பப்பட்டது.

மேலும், M/s. Cithradevi water suppliers, Chennai நிறுவனத்தாரின் 10.03.2019ம் தேதிய கடிதத்தில் L1 நிறுவனம் ஒப்பந்தப்புள்ளியில் வழங்கியுள்ள விலை வீதத்தில் கூடுதல் வைப்புத் தொகை செலுத்தி பணி மேற்கொள்வதற்கு விருப்பம் இல்லை என தெரிவித்துள்ளனர்.

எனவே, இக்கோப்பில் கோரப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்:214/2018-19-ஐ ரத்து செய்யவும், மேலும் இப்பணிக்காக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள L1 நிறுவனமாகிய M/s.Sri Lakshmi transport, madhurai நிறுவனத்தின் பிணை வைப்புத்தொகையை பறிமுதல் செய்து மாநகராட்சி கணக்கில் வரவு வைக்கவும் மற்றும் L2, L3, L4 நிறுவனங்களின் வைப்புத்தொகைகளை நிறுவனத்தார் கோரும் பட்சத்தில் திரும்ப வழங்கவும் தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் அவர்களின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:-

1. இக்கோப்பில் கோரப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்:214/2018-19 -ஐ ரத்து செய்ய அனுமதி அளிக்கலாம்.

2. இக்கோப்பில் கோரப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்:214/2018-19-ஐ ரத்து செய்யவும், மேலும் இப்பணிக்காக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள L1 நிறுவனமாகிய M/s. Sri Lakshmi transport, madhurai நிறுவனத்தின் பிணை வைப்புத்தொகையை பறிமுதல் செய்து மாநகராட்சி கணக்கில் வரவு வைக்கவும் மற்றும் L2, L3, L4 நிறுவனங்களின் வைப்புத்தொகைகளை நிறுவனத்தார் கோரும் பட்சத்தில் திரும்ப வழங்கவும் அனுமதி அளிக்கலாம்.

இ4/ 8209/18 (மையம்)

தீர்மானம் எண்.601 (பொருள்–11) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.

பொருள். 12

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, ஸ்ரீரங்கம் மற்றும் கோ.அபிசேகபுரம் கோட்டத்தில் தற்பொழுது நுண்ணுயிர் உரக்கூடங்கள் 13 எண்ணிக்கை அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்நுண்ணுயிர் உரக்கூடங்களுக்கு வார்டுகளில் உள்ள வீடுகளிலிருந்து திடக்கழிவுகளை தரம் பிரித்து வாங்கும் பணியினை முழுமையாக மேற்கொள்வதற்கு ஸ்ரீரங்கம் மற்றும் கோ.அபிசேகபுரம் கோட்டத்திற்கு 1200 வீடுகளுக்கு 1 வாகனம் வீதம் கீழ்கண்ட விவரப்படி தேவைப்படுகிறது.

Sl. No	Zone	No of MCC	Total no of House holds	Requirement of LCV (1200 H.H / vehicle)	LCV Already provided	Present Requirement LCV (1200 H.H / vehicle)
1.	Srirangam	6	55067	46	31	15
2.	K.Abishekapuram	7	78652	66	49	17
Total		**13**	**133719**	**112**	**80**	**32**

மேற்கண்ட அட்டவணையில் உள்ள விவரப்படி கூடுதலாக தேவைப்படும் 32 எண்ணிக்கை புதிய இலகுரக வாகனங்கள் வாங்குவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையரிடம் அனுமதி வேண்டி மற்றும் ஒரு கோப்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் வீட்டு வாசலில் திடக்கழிவுகளை தரம் பிரித்து வாங்கி நுண்ணுயிர் உரக்கூடத்திற்கு கொண்டு சேர்க்கும் பணிக்கு மேற்கண்ட விவரப்படி இலகுரக வாகனங்கள் அவசியம் தேவைப்படுவதாக உதவி ஆணையர்கள் கோரியுள்ளதால் அவசர அவசியம் கருதி 32 எண்ணிக்கைகள் தனியார் இலகுரக வாகனங்களை 121 நாட்களுக்கு வாடகைக்கு அமர்த்திட ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும், இதற்காகும் செலவினத்தொகை ரூ.93.26 லட்சத்திற்கும் தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:

1. 32 எண்ணிக்கை தனியார் இலகுரக வாகனங்களை 121 நாட்களுக்கு வாடகைக்கு அமர்த்திட ஆகும் செலவினத்தொகை ரூ.93.26 லட்சத்திற்கும் நிர்வாக அனுமதி அளிக்கலாம்.
2. 2019–20ம் ஆண்டு வரவு – செலவு திட்ட பொது நிதிக் கணக்குத் தலைப்பு எண் 2305111ல் (திடக்கழிவு மேலாண்மை பராமரிப்புப் பணிகள் – மனித ஆற்றல் உட்பட) ஒதுக்கீடு செய்யப்படட்டுள்ள தொகை ரூ.2500/- லட்சத்திலிருந்து மேற்கண்ட செலவினத்தினை மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

இ5/7706/19(மையம்)

தீர்மானம் எண்.602 (பொருள்–12) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.

பொருள். 13

திருச்சிரப்பள்ளி மாநகராட்சி ஸ்ரீரங்கம் கோட்டத்தில் வார்டு எண்.05க்குட்பட்ட மாமம்பழச் சாலை வடக்கு பகுதி காவேரி ஆற்று பாலத்தில் விநாயகர் சதுர்த்தி விழா 04.09.2019 அன்று விநாயகர் சிலைகளை கரைக்கும் பணிகளுக்கு தேவையான சவுக்கு குச்சியிலான barricading தடுப்புகள், மேடைகளை ஹலஜன் விளக்குகள், குடிநீர் வசதி, சிறப்பு மருத்துவ முகாம் ஏற்பாடுகள், தற்காலிக கழிப்பறை மற்றும் கிரேன் ஆகிய பணிகளை மேற்கொள்வதற்கு ரூ.3.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, மேற்படி பணியினை மதிப்பீட்டின் விலையை விட 0.25 சதவீதம் குறைவான விலைவீதத்தில், 1994 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டம் பிரிவு 15ன் கீழ் திரு. M. பாபுரர்ஜ் ஒப்பந்ததாரர் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டதை தனிஅலுவலர் அவர்களின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது .

அலுவலகக் குறிப்பு :

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

இ7/10512/2019(மையம்)

தீர்மானம் எண்.603 (பொருள்–13) : பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.

பொருள். 14

திருச்சிரப்பள்ளி மாநகராட்சி ஸ்ரீரங்கம் கோட்டம் வார்டு எண்.08 மற்றும் 09க்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள ஓயாமரி சுடுகாடு மற்றும் அய்யாளம்மன் படித்துறை ஆகிய பகுதிகளில் உள்ள நுண் உரம் செயலாக்க மையங்களில் மிகுதியான அளவில் குப்பைகள் மிகுதியாக சேகரம் ஆகி வருவதால், இந்த மையங்களிள் உள்ள பக்கவாட்டில் அடிக்கடி தீ விபத்து ஏற்படுவதால், இப்பகுதியில் உள்ள பொதுமக்கள் மிகவும் சிரமப்படுகின்றனர். எனவே பொதுமக்களின் நலன் கருதி மேற்குறிப்பிட்டுள்ள பகுதிகளில் ஜே.சி. பி இயந்திரம் மற்றும் டிப்பர் லாரி மூலம் குப்பைகளை அகற்றும் பணியினை மேற்கொள்ளப்பட்டதற்கு ரூ.4.95 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, மேற்படி பணியினை மதிப்பீட்டின் விலையை விட 0.07 சதவீதம் குறைவான விலைவீதத்தில், 1994 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டம் பிரிவு 15ன் கீழ் மெசர்ஸ். GR & சன்ஸ், திருச்சி ஒப்பந்ததாரர் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டதை தனிஅலுவலர் அவர்களின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

இ7/10127/2019(மையம்)

தீர்மானம் எண்.604 (பொருள்–14) : பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.

பொருள். 15

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, அரியமங்கலம் மற்றும் பொன்மலைக் கோட்டத்தில் தற்பொழுது நுண்ணுயிர் உரக்கூடங்கள் 18 எண்ணிக்கை அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்நுண்ணுயிர் உரக்கூடங்களுக்கு வார்டுகளில் உள்ள வீடுகளிலிருந்து திடக்கழிவுகளை தரம் பிரித்து வாங்கும் பணியினை முழுமையாக மேற்கொள்வதற்கு அரியமங்கலம் மற்றும் பொன்மலை கோட்டத்திற்கு 1200 வீடுகளுக்கு 1 வாகனம் வீதம் கீழ்கண்ட விவரப்படி தேவைப்படுகிறது.

Sl. No	Zone	No of MCC	Total no of House holds	Requirement of LCV (1200 H.H / vehicle)	LCV Already provided	Present Requirement LCV (1200 H.H / vehicle)
1.	Ariyamangalam	9	64712	54	45	9
2.	Ponmalai	9	74965	62	49	17
Total		**18**	**139677**	**116**	**90**	**26**

மேற்கண்ட அட்டவணையில் உள்ள விவரப்படி கூடுதலாக தேவைப்படும் 26 எண்ணிக்கை புதிய இலகுரக வாகனங்கள் வாங்குவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையரிடம் அனுமதி வேண்டி மற்றும் ஒரு கோப்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் வீட்டு வாசலில் திடக்கழிவுகளை தரம் பிரித்து வாங்கி நுண்ணுயிர் உரக்கூடத்திற்கு கொண்டு சேர்க்கும் பணிக்கு மேற்கண்ட விவரப்படி இலகுரக வாகனங்கள் அவசியம் தேவைப்படுவதாக உதவி ஆணையர்கள் கோரியுள்ளதால் அவசர அவசியம் கருதி 26 எண்ணிக்கை தனியார் இலகுரக வாகனங்களை 121 நாட்களுக்கு வாடகைக்கு அமர்த்திட ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும், இதற்காகும் செலவினத்தொகை ரூ.75.78 லட்சத்திற்கும் தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:

1. 26 எண்ணிக்கை தனியார் இலகுரக வாகனங்களை 121 நாட்களுக்கு வாடகைக்கு அமர்த்திட ஆகும் செலவினத்தொகை ரூ.75.78 லட்சத்திற்கும் நிர்வாக அனுமதி அளிக்கலாம்.
2. 2019–20ம் ஆண்டு வரவு – செலவு திட்ட பொது நிதிக் கணக்குத் தலைப்பு எண் 2305111ல் (திடக்கழிவு மேலாண்மை பராமரிப்புப் பணிகள் – மனித ஆற்றல் உட்பட) ஒதுக்கீடு செய்யப்படட்டுள்ள தொகை ரூ.2500/- லட்சத்திலிருந்து மேற்கண்ட செலவினத்தினை மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

இ5/7705/19(மையம்)

தீர்மானம் எண்.605 (பொருள்–15) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.

பொருள். 16

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மைப் பணியில் திடக்கழிவுகளை வீட்டு வாசலில் தரம் பிரித்து வாங்கும் பணிக்கு 30 எண்ணிக்கை 2 க.மீ கொள்ளளவுள்ள இலகுரக டிப்பர் வாகனங்களில் திடக்கழிவுகளை தனித்தனியாக வாங்குவதற்கு ஏதுவாக கூடுதல் கட்டுமான பணியினை மேற்கொள்ள தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதி நாள்:20.11.2018–ல் ஒப்புதல் பெறப்பட்டு, இரண்டாவது முறையாக 12.02.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில், இரண்டு நிறுவனங்கள் கலந்து கொண்டு ஒப்பந்தப்புள்ளிகள் சமர்ப்பித்துள்ளார்கள்.

தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் 19.06.2019ந் தேதிய ஆலோசனை கூட்டத்தில் துப்புரவு ஆய்வர்கள், துப்புரவு அலுவலர்கள் ஆகியோர்கள் 2 க.மீ கொள்ளளவுள்ள இலகுரக டிப்பர்

வாகனங்களை மாற்று பணிக்கு பயன்படுத்த ஏதுவாக 30 வாகனங்களை கூடுதல் கட்டுமானம் கட்டாமல் பயன்படுத்தலாம் என்று ஆலோசனை வழங்கினார்கள்.

எனவே, தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் ஆலோசனை கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின் படியும் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனை வரிசை என்.10-ல் தெரிவித்துள்ள படியும் இக்கோப்பில் கோரப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்:412/2018-19-ஐ ரத்து செய்யவும், மேலும் இப்பணிக்காக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனங்களின் பிணை வைப்புத்தொகைகளை திரும்ப வழங்கவும் தனி அலுவலர் மன்ற அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:-

1. திடக்கழிவு மேலாண்மைப் பணியில் திடக்கழிவுகளை வீட்டு வாசலில் தரம் பிரித்து வாங்கும் பணிக்கு 30 எண்ணிக்கை 2 க.மீ கொள்ளளவுள்ள இலகுரக டிப்பர் வாகனங்களில் திடக்கழிவுகளை தனித்தனியாக வாங்குவதற்கு ஏதுவாக கூடுதல் கட்டுமான பணிக்கு கோரப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்:412/2018-19 -ஐ ரத்து செய்ய அனுமதி அளிக்கலாம்.
2. இக்கோப்பில் கோரப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்:412/2018-19-ன் வாயிலாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனங்களின் பிணை வைப்புத்தொகைகளை திரும்ப வழங்க அனுமதி அளிக்கலாம்.

இ5/10108/2018(மையம்)

தீர்மானம் எண்.606 (பொருள்–16) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.

பொருள். 17

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, கோ.அபிஷேகபுரம் கோட்டம், வார்டு எண்.40 எடமலைப்பட்டி புதூர் மாநகராட்சி உயர்நிலைப்பள்ளியாக உள்ளதால், பள்ளியில் பயின்று வரும் மாணவ மாணவியர்களுக்கு போதிய வகுப்பறைகள் இல்லாததால், பள்ளி வளாகத்தின் திறந்த வெளி பகுதியில் வகுப்புகள் நடைபெற்று வருகிறது.

எனவே பள்ளி மாணவ மாணவியர்களின் நலன் கருதி மேற்கண்ட பள்ளி வளாகத்தின் வடபுறம் உள்ள கட்டிட வளாகத்தின் முதல் தளத்தில் கூடுதல் வகுப்பறைகள் கட்டும் பணி மற்றும் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்வதற்கு, ரூ.78.20 லட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு தனி அலுவலர் அவர்களின் பார்வைக்கும், நிர்வாக அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

1. மதிப்பீட்டுத் தொகை ரூ.78.20 லட்சத்திற்கு கல்விநிதியின் கீழ் நிர்வாக அனுமதி வழங்கலாம்.
2. 2019–20ம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தில் கல்வி நிதி பள்ளி கட்டிடங்கள் புதிதாக கட்டுதல் / மேம்படுத்துதல் என்ற தலைப்பின் (தலைப்பு எண்.4102001) கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளத் தொகை ரூ.500.00 லட்சத்திலிருந்து இப்பணிக்கான நிதியினை ஒதுக்கீடு செய்து கொள்ள அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண்:இ1/10485/2019(மையம்)

தீர்மானம் எண்.607 (பொருள்–17) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.

(ஒப்பம்) – ந. இரவிச்சந்திரன்,
தனிஅலுவலர் மற்றும் ஆணையர்,
திருச்சிராப்பள்ளி மாநகராட்சி.